**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**SESSION CASE NO.106/2023**

2025 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 05 ஆம் நாள் செவ்வாய் கிழமை

அ.சா.13 (பட்டியல் சாட்சி–15) இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மருத்துவர்.நவீன் | த/பெ.: | நாகராஜன் |
| கிராமம்: | திருவாரூர் | தாலுக்கா: | திருவாரூர் |
| மதம்: | இந்து | தொழில்: | மருத்துவர், திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை. |
| வயது: | 37 | முகவரி: | திருவாரூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 05.08.2025

**முதல் விசாரணை :–**

நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் மூத்த உதவிப் பேராசியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.02.2022ம் தேதி அன்று பணியில் இருந்தபோது திருத்துறைப்பூண்டி காவல் நிலைய குற்ற எண்.87/2022, வழக்கில் சம்பந்தபட்ட சந்தியா 15 வயது என்ற பெண் நபரை அக்காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களால் பிணக்கூறாய்வு செய்ய வேண்டுகோளுக்கிணங்க முதல்நிலை பெண் காவலர் சங்கீதா என்பவரால் விண்ணப்பம் பெறப்பட்டது. மேலும் மாலை 04.10 மணியளவில் அன்றைய தினமே பிணக்கூறாய்வு தொடங்கப்பட்டது. பிணக்கூறாய்வு அறிக்கை பின்வருமாறு:– நல்ல உடல் வாகு கொண்ட பெண்ணின் பிரேதமானது மல்லாந்த நிலையில் காணப்பட்டது. பிண விரைப்பு இரண்டு கால்களில் மட்டும் காணப்பட்டது. கை மற்றும் கால் நிறங்கள் நீல நிறத்தில் காணப்பட்டது. உடலில் ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு 1. செம்பழுப்பு நிற அழுத்த தடைய சிராய்ப்பு காயம் 18x1 – 2 செ.மீ அளவில் சாய்ந்து மற்றும் முழுமையற்று கழுத்துப்பகுதியில் காணப்பட்டது. அந்த

காயம் தாடையிலிருந்து 2 செ.மீ கீழும், கழுத்துக்குழியில் இருந்து 8 செ.மீ மேலும் காணப்பட்டது. வலது புறம் கழுத்தில் அந்த காயம் வலது புற காதின் பின்பக்கமாக உள்ள தேன் கூடு போல் உள்ள எலும்பிற்கு 2 செ.மீ கீழும், இடது புற கழுத்து பகுதியில் அந்த காயம் இடது புற காதின் பின்பக்கம் உள்ள தேன்கூடு போல் உள்ள எலும்பிற்கு 3 செ.மீ கீழ்புறமாக காணப்பட்டது. மேலும் அந்த காயம் பின்பக்கம் உள்ள முடியின் கோடு வரை இணைந்து காணப்பட்டது. கழுத்துப்பகுதியை மேலும் கூறாய்வு செய்து பார்த்ததில் காயத்தின் அடிப்பகுதி வெளிர் நிறத்தில் காணப்பட்டது. மூச்சுக்குழாய், மூச்சுக்குழல், நாவடி எலும்பு, கழுத்தில் உள்ள இரத்த நாளங்கள் அனைத்தும் நல்ல நிலையில் காணப்பட்டது. 2) 1x0.5 செ.மீ அளவில் இடது புற கால் பாதத்தில் உள்ள பெரும் விரல், இரண்டாவது விரல், மூன்றாவது விரல்களில் செம்பழுப்பு நிற சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது. 3) உடலில் வேறு ஏதும் வெளிப்புற மற்றும் உள்புற காயங்கள் மேற்கண்ட காயங்களை தவிர்த்து வேறு காயங்கள் ஏற்படவில்லை. தலைப்பகுதியை கூறாய்வு செய்து பார்த்ததில் தலை தோல், மண்டை எலும்புகள், மூளை திரை, மூளை நல்ல நிலையில் காணப்பட்டது. மூளை வீங்கி காணப்பட்டது. இரண்டு புற நுரையீரல்கள் நல்ல நிலையில் காணப்பட்டது. அதில் இரண்டு நுரையீரல்களும் பலதரப்பட்ட குண்டு ஊசி போல் இரத்தக்கசிவு காணப்பட்டது. இருதயம், கல்லீரல், மண்ணீரல், இருபுற சிறுநீரகம், இடுப்பு எலும்புகள், தண்டுவட எலும்புகள் நல்ல நிலையில் காணப்பட்டது. பெண் உறுப்பு எந்த விதமான காயமும் இன்றி காணப்பட்டது. கர்ப்பப்பை காலியாக காணப்பட்டது. சிறுநீர்ப்பை காலியாக காணப்பட்டது. இரைப்பயையில் 100 கி பாதி செரித்த உணவு எந்த விதமான வாசனையும் இன்றி காணப்பட்டது. உள் உறுப்புகள் அனைத்தும் வெற்று தோற்றத்தில் சிவந்து காணப்பட்டது. மேலும் உள் உறுப்புகளை சேகரித்து தஞ்சாவூர் தடய அறிவியல் துறைக்கு இராசயன பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டது. அதில் எந்த விதமான விஷமோ அந்த அறிக்கையில் கண்டறியப்படவில்லை. மேற்கூறிய நபர் தூக்கு மாட்டியதால்

ஏற்பட்ட மூச்சுத்திணறலால் இறந்துள்ளார் என்று கருத்து கூறி சான்று வழங்கினேன். நான் வழங்கிய முதல் கட்ட பிணக்கூறாய்வு சான்று **அ.சா.ஆ.6** ஆகும். தடய அறிவியல் துறை வழங்கிய அறிக்கை **அ.சா.ஆ.7** ஆகும். நான் வழங்கிய இறுதி கட்ட பிணக்கூறாய்வு சான்று **அ.சா.ஆ.8** ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

தடய அறிவியல் துறையிலிருந்து பகுப்பாய்வு அறிக்கை எந்த தேதியில் எனக்கு கிடைக்கப்பெற்றது என்றால் 18.03.2022–ல். போலீசார் என்னிடம் விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :– இல்லை.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.